15-ம், பகுதி அலுவலகங்கள் புதியதாக 19-ம், சோதனைச் சாவடி 1-ம் என்ற வகையிலே, கிட்டத்தட்ட 40 அலுவலகங்கள் புதியதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக ஆட்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு நாளும் அதிகமாகும் வாகனங்களினுடைய எண்ணிக்கைக்கேற்ப அதனைக் கணக்கிட்டு எந்த இடத்தில் அலுவலகம் தேவையென்பதை அறிந்து, ஒவ்வோர் ஆண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி வழங்கி வருகிறார்கள். இந்த ஆண்டுகூட கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்களில் கட்டடங்கள் இல்லையோ அந்த இடங்களில் நிலம் இருக்குமானால், அந்த இடத்தில் கட்டடம் கட்டவும், ஏற்கெனவே இருக்கிற யூனிட் அலுவலகங்களை வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களாக மாற்றவும், புதிய யூனிட் அலுவலகங்களை அமைப்பதுவுமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதிலே, நம்முடைய செஞ்சி இல்லை. ஏனென்று கேட்டால், அங்கே வாகனங்கள் அதிகமாக இல்லை. South Arcot, North Arcot என்ற பழைய வடாற்காடு, தென்னாற்காடு மாவட்டங்களில் அதிகமான அலுவலகங்கள் அருகருகில் இருக்கின்ற காரணத்தால், செஞ்சியைத் தற்போது எடுக்கின்ற முயற்சி இல்லை. பிற்காலத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்குமானால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன், Substitute-க்கு இரண்டாவது supplementary கிடையாது.

வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**74—**

**சுற்றுலா மையம்**

***106226—திரு. ரா. வரதராஜன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கயத்தாறு வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையைச் சுற்றியுள்ள பகுதியில் பூங்கா அமைத்து சுற்றுலா மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2010 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்:

(அ) மற்றும் (ஆ) 2008-2009 ஆம் வருடம், தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவிடத்தினை மேம்படுத்திட, மைய அரசு, சுதந்திரப் போராட்ட வீரர்கள் சுற்றுச் சாலைத் திட்டத்தின்கீழ் ரூ.27.49 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அங்குக் கட்டணக் கழிப்பிடம், விளையாட்டுச் சாதனங்களுடன்கூடிய குழந்தைகள் விளையாட்டுப் பூங்கா, சுற்றுச் சுவர் கட்டுதல், உயர் மின் கம்ப விளக்குகள் அமைத்தல், 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த் தொட்டி கட்டுதல், பேருந்து நிலையத்தில் கட்டணக் கழிப்பிடம் கட்டுதல் போன்ற பணிகள் முடிவடைந்துள்ளன என்'பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன்.

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் சுதந்திரத்திற்காக முதன்முதலாக முழக்கமிட்ட, மாமன்னர் "வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை" தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறில், மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களால் கட்டப்பட்டு தற்போது அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தச் சிலை சுமார் அரை ஏக்கர் நிலத்திற்குள்தான் அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். ஆனாலும், அது காஷ்மீர்-கன்னியாகுமரி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையைப் பார்வையிடவும், அந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கவும் வருகிறார்கள். அந்த இடம் குறுகிய இடமாக இருப்பதால் அவர்கள் தங்குவதற்கும், இடத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு கொண்டுவரும் உணவை உண்பதற்கும் இடமில்லாமல் சிரமப்படுகிறார்கள். அதற்குப் பின்புறம் அரசு புறம்போக்கு நிலம் 5 ஏக்கருக்கு மேல் உள்ளது. அந்த இடத்தை அரசு சுற்றுலா மையமாக அறிவித்து, அங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு வந்து செல்லுபவர்களுக்கு ஒரு நிழற்குடை அமைத்துத் தர அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

[2010 ஏப்ரல் 21

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கயத்தாறு பகுதியில் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை அமைக்கப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் அது பராமரிக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே வருகிற பயணிகளின் எண்ணிக்கைகூட, ஆண்டுக்காண்டு அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. இருந்தாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கலாம். அதேநேரத்தில் அந்த இடத்திற்குப் பின்புறத்தில், 5 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலம் இருப்பதாகவும் கூறுகிறார்கள். அதனையும் கருத்திற்கொண்டு, வருங்காலத்தில் அதனைப் பரிசீலிக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. வரதராஜன்.

முற்பகல் 9-45

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்னர் வீரபாண்டிய கட்டபொம்மனுடைய நினைவு நாள் அக்டோபர் 16-ல் அனுசரிக்கப்படுகிறது. அந்த நினைவு நாளில் சமுதாய மக்களும், அந்தப் பகுதியிலுள்ள பொது மக்களும், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரும் அஞ்சலி செலுத்த வருகிறார்கள். இதற்கு முன்பு நான்கு வழிச் சாலை இல்லாமல் இருந்தது. இப்பொழுது நான்கு வழிச் சாலை வந்த காரணத்தினால் அங்கு இடம் போதாத நிலை இருக்கிறது. அதற்கு முன்பு, ஒரு பால் குளிரூட்டும் விற்பனை நிலையம் இருந்தது. அதுவும் அந்த நான்கு வழிச் சாலையிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது. ஜனவரி 3 ஆம் தேதி அவருடைய பிறந்த நாள்; அக்டோபர் 16 ஆம் தேதி அவருடைய நினைவு நாள். அப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஏறத்தாழ 20 ஆயிரம், 25 ஆயிரம் மக்கள் வந்து அஞ்சலி செலுத்துவார்கள். அவர்களுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை; அதனைத் தந்து, தங்குவதற்கு ஒரு மண்டபமும் அமைத்து, பூங்காவையும் அமைத்துக் கொடுத்தால் அரசுக்கும் வருவாய் இருக்கும். இந்த அரசுக்கம் அவர்கள் நன்றியுடையவர்களாக இருப்பர்.

2010 ஏப்ரல் 21]

எனவே, வீரபாண்டிய கட்டபொம்மனுடைய புகழைப் பறைசாற்றும் வகையில் உடனே அவற்றைக் கட்டித் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களாக இருந்தாலும், மொழிப் போர் வீரர்களாக இருந்தாலும் அவர்களையெல்லாம் மதிக்கிற அளவில், கலைஞருடைய ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான் தியாகிகள் பென்ஷன் என்று வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டபொம்மன் சிலையைப் பராமரிப்பதைப்போல, நிச்சயமாக வருங்காலத்தில் அவருடைய நினைவு தினமான அக்டோபர் 16 ஆம் தேதியன்று பஸ் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல் அந்தப் பகுதிகளில் வசதி வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தற்போதைக்கு அங்குப் போதுமான இட வசதி இல்லை என்று சொல்வதால், அங்கு அரசு நிலங்கள் இருக்கின்றனவா என்பதையும் கண்டறிந்து, வருங்காலத்தில் நிதி நிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**75—**

**மாணவர் விடுதி**

***90751—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனப்பள்ளி, ஆலப்பட்டி, குருபரபள்ளி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்